# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின்
# பாராளுமன்றம்

---

## நிமல் ரூபசிங்க நட்புறவு மன்றம் (கூட்டிணைத்தல்)

**நிமல் ரூபசிங்க நட்புறவு மன்றத்தைக் கூட்டிணைப்பதற்கானதொரு சட்டமூலம்**

---

*அனுராதபுர மாவட்டப் பாராளுமன்ற உறுப்பினர் கௌரவ இஷாக் ரஹ்மான் அவர்களால் 2018, சனவரி மாதம் 23 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்டது*

*(2018, சனவரி மாதம் 08 ஆம் திகதியன்று வர்த்தமானியில் வெளியிடப்பட்டது)*

*பாராளுமன்றத்தால் அச்சிடப்பணிக்கப்பட்டது*

---

**[ 230 ஆம் சட்டமூலம் ]**

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்தில் பதிப்பிக்கப்பெற்றது
கொழும்பு 5, அரசாங்க வெளியீட்டலுவலகத்தில் பெற்றுக்கொள்ளலாம்

**விலை : ரூபா 18.00** **தபாற் செலவு : ரூபா 10.00**

*இச்சட்டமூலத்தை* www.documents.gov.lk *எனும் இணையத்தளத்திலிருந்து பதிவிறக்கம் செய்ய முடியும்.*

## நிமல் ரூபசிங்ஹ நட்புறவு மன்றத்தைக் கூட்டிணைப்பதற்கானதொரு சட்டம்

*முன்னுரை.*

“நிமல் ரூபசிங்ஹ நட்புறவு மன்றம்” என அழைக்கப்படுவதும், அறியப்படுவதுமான மன்றமொன்று அதன் உறுப்பினர்களால் இணங்கிக்கொள்ளப்பட்ட விதிகளுக்கிணங்கச் சொல்லப்பட்ட மன்றத்துடன் தொடர்புபட்ட எல்லாக் கருமங்களையும் பயனுற நிறைவேற்றிக் கொண்டுநடாத்தும் நோக்கத்துக்காக இதற்குமுன்னர் இலங்கையில் தாபிக்கப்பட்டுள்ளதாதலாலும் :

அத்துடன் சொல்லப்பட்ட மன்றம் எப்பல்வேறு குறிக்கோள்களுக்காகவும், கருமங்களுக்காகவும் உருவாக்கப்பட்டதோ அப்பல்வேறு குறிக்கோள்களையும், கருமங்களையும் இதுவரை வெற்றிகரமாக நிறைவேற்றியும் கொண்டுநடாத்தியும் வந்துள்ளதாதலாலும் அவ்விண்ணப்பத்தை அனுமதித்தல் பொதுமக்கள் நன்மைக்கானதாகவிருக்குமாதலாலும் :

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் பாராளுமன்றத்தினால் பின்வருமாறு சட்டமாக்கப்படுவதாகுக :-

*சுருக்கப்பெயர்.*

**1**. இச்சட்டம், 2018 ஆம் ஆண்டின் ஆம் இலக்க, நிமல் ரூபசிங்ஹ நட்புறவு மன்றம் (கூட்டிணைத்தல்) சட்டம் என எடுத்துக்காட்டப்படலாம்.

*நிமல் ரூபசிங்ஹ நட்புறவு மன்றத்தைக் கூட்டிணைத்தல்.*

**2**. இச்சட்டம் தொடங்கும் திகதியிலிருந்தும் அதன்பின்னரும் (இதனகத்துப் பின்னர் “மன்றம்” எனக் குறிப்பீடுசெய்யப்படும்) நிமல் ரூபசிங்ஹ நட்புறவு மன்றத்தின் தற்போதைய உறுப்பினர்களாக உள்ளவர்களும் அல்லது இத்தால் அமைக்கப்படும் கூட்டுத்தாபனத்தின் உறுப்பினர்களாக இனிமேல் சேர்த்துக் கொள்ளப்படுபவர்களுமான அத்தகையோரான அத்தனை ஆட்களும் (இதனகத்துப்பின்னர் “கூட்டுத்தாபனம்” எனக் குறிப்பீடுசெய்யப்படும்) “நிமல் ரூபசிங்ஹ நட்புறவு மன்றம்” என்ற பெயரின்கீழும் மகுடத்தின்கீழும் இடையறாவழியுரிமை கொண்ட ஒரு கூட்டிணைக்கப்பட்ட குழுவாகவிருத்தல் வேண்டும். அத்துடன் அது அப்பெயர்கொண்டு எல்லா நீதிமன்றங்களிலும்

வழக்குத் தொடுக்கலாம் என்பதுடன், அதற்கெதிராக வழக்குத் தொடுக்கவும்படலாம் அத்துடன் பொது இலச்சினையொன்றை வைத்திருக்கவும், பயன்படுத்தவும் விரும்பியாங்கு அதை மாற்றவும் அது முழுத்தத்துவமும், அதிகாரமும் கொண்ட தாயிருத்தலும் வேண்டும்.

கூட்டுத்தாபனத்தின் பொதுக் குறிக்கோள்கள்.

**3**. கூட்டுத்தாபனம் அமைக்கப்படுவதற்கான பொதுக் குறிக் கோள்கள் பின்வருவனவாயிருக்க வேண்டுமென இத்தால் வெளிப்படுத்தப்படுகின்றது :-

(அ) இலங்கையில் வாழும் அனைத்து சாதியினர்களும் ஐக்கியம் மற்றும் சுபிட்சம் மிக்க இலங்கையராக வாழ் வதற்குகந்த சூழலை ஏற்படுத்துவதற்காக தேவையான வழிகாட்டல்கள் மற்றும் வேலைத்திட்டங்களை நடைமுறைப்படுத்தல் ;

(ஆ) “சட்டத்தை அறியாதிருப்பது குற்றப்பரிகாரம் ஆகாது” என்ற தொனிப்பொருளை முன்னிலைப்படுத்தி பேதங்களின்றி இலங்கை மக்கள் சமுகத்திற்கு சட்டங் களை அறிவுறுத்துவதற்காக தேவையான சட்ட அறிவைப் பெற்றுக்கொடுப்பதுடன் அது தொடர்பான வேலைத்திட்டங்களை நடைமுறைப்படுத்தல்;

(இ) “சிசு சஹன மவுபிய கெபகர சிஷ்ய ஆதார வெடசடஹன”ஐ நடைமுறைப்படுத்துவதன்மூலம் நாட்டின் சிறுவர் கல்வியறிவை அபிவிருத்தி செய்வதற்குத் தேவையான கற்றல் உபகரணங்களையும் மற்றும் வசதிகளையும் பெற்றுக்கொடுத்தல்;

(ஈ) கல்வியை மேம்படுத்தும்பொருட்டு தேவையான புத்தகங்களை அச்சடித்தல், வெளியீடுகளை வெளியிடுதல் மற்றும் அவற்றை விநியோகித்தல்;

(உ) முன்பள்ளி மாணவர்களின் கல்வி மேம்பாட்டிற்குத் தேவையான அறிவைப் பெற்றுக்கொடுத்தல் மற்றும் அதற்கான கல்வி வசதிகளை ஏற்படுத்தல்;

(ஊ) கல்வி கற்கும் சிறுவர்களின் அறிவை விருத்திசெய்வதற்குத் தேவையான நூலக அபிவிருத்தி மற்றும் அவைகளுக்கு தேவையான நூல்களை வழங்குதல்;

(எ) கல்விப் பொதுத் தராதர (சாதாரண) மற்றும் (உயர்தர) மாணவர்களின் கல்வி அறிவை மேம்படுத்தும் பொருட்டு தேவையான கருத்தரங்கு மற்றும் செயலமர்வுகளை நடாத்துதல்;

(ஏ) விசேட தேவை உடைய சிறுவர்களின் கல்வித் தேவைகளுக்கு உதவி வழங்குதல்;

(ஐ) கூட்டுத்தாபனத்தின் குறிக்கோள்களை ஊக்குவிப்பதற்கு விரிவுரை, செயலமர்வுகள், கலந்துரையாடல்கள் மற்றும் களியாட்ட நிகழ்ச்சிகள் நடாத்துதல்; அத்துடன்

(ஒ) கூட்டுத்தாபனத்தின் குறிக்கோள்களை ஒத்த உள்நாட்டு, வெளிநாட்டு நிறுவனங்கள் அல்லது அமைப்புகளுடன் ஒத்துழைத்தல், செயற்படல்.

கூட்டுத்தாபனத்தின் தத்துவங்கள்.

**4**. இச்சட்டத்தின் ஏற்பாடுகளுக்கமைய வங்கிக்கணக்கு ஆரம்பித்தல், நடைமுறைப்படுத்தல் மற்றும் மூடுதல், பிணையுடன் அல்லது பிணையின்றி பணம் கடனாகப் பெறுதல் அல்லது பெற்றுக்கொள்ளல், அன்பளிப்புகள் மற்றும் நன்கொடைகள் பெற்றுக்கொள்ளல் அல்லது சேகரித்தல், கூட்டுத்தாபனத்தின் நிதியத்தை முதலீடு செய்தல் மற்றும் குறிக்கோளை நிறைவேற்றுவதற்குத் தேவையான உத்தியோகத்தர்களை அல்லது ஊழியர்களை சேவையில் ஈடுபடுத்தல் மற்றும் சேவையிலிருந்து நீக்குதல் உள்ளடங்கலாக கூட்டுத்தாபனத்தின் சகல குறிக்கோள்கள் அல்லது அதில் சில குறிக்கோள்களையாவது நிறைவேற்றுவதற்கு அல்லது அடைந்துகொள்வதற்குத் தேவையான நடவடிக்கைகள், நடவடிக்கைகளை நிறைவேற்றல் மற்றும் நடைமுறைப்படுத்தல் என்பவற்றுக்கான அதிகாரம் கூட்டுத்தாபனத்திற்கு உண்டு.

கூட்டுத்தாபனத்தின் அலுவல்களை முகாமை செய்தல்.

**5**. (1) கூட்டுத்தாபனத்தின் முகாமையும் நிருவாகமும் தவிசாளர், செயலாளர், பொருளாளர் மற்றும் பதினொரு பேரைக்கொண்ட கூட்டுத்தாபனத்தின் அப்போதைக்கு வலுவிலுள்ள விதிகளுக்கிணங்கத் தெரிவுசெய்து நியமிக்கப்பட்ட நிர்வாகக் குழு ஒன்றின்மூலம் இச்சட்டத்தின் ஏற்பாடுகளுக்கும் கூட்டுத்தாபனத்தின் அப்போதைக்கு வலுவிலுள்ள விதிகளுக்கும் அமைய நிருவகிக்கப்படுதல் வேண்டும்.

(2) இந்தச் சட்டம் அமுலுக்குவரும் ஆரம்ப தினத்திற்கு முந்திய நாட்களில் இருந்த மன்றத்தின் நிறைவேற்றுக்குழு கூட்டுத்தாபனத்தின் முதலாவது நிறைவேற்றுக்குழு ஆகும்.

கூட்டுத்தாபனத்தின் விதிகள்.

**6**. (1) ஏதேனும் பொதுக்கூட்டத்தில், சமுகமாயிருந்து வாக்களிக்கும் உறுப்பினர்களில் மூன்றிலிரண்டு பங்கினருக்குக் குறையாதோரின் வாக்குப்பெரும்பான்மைகொண்டு, பின்வரும் கருமங்களுள் எல்லாவற்றுக்குமாக அல்லது எவற்றுக்குமாகவும் இச்சட்டத்தின் ஏற்பாடுகளுடன் ஒவ்வாதனவாகவிராத விதிகளை ஆக்குதல் கூட்டுதாபனத்துக்குச் சட்டமுறையானதாதல் வேண்டும்.

(அ) உறுப்பாண்மை வகுக்கப்படுதலும், உறுப்பினர்களை அனுமதித்தலும், விலக்குதலும் அல்லது அவர்கள் பதவியை விட்டு விலகுதலும் உறுப்பினர் சந்தா; மற்றும்

(ஆ) கூட்டுத்தாபனத்தினதும், பணிப்பாளர் சபையினதும் கூட்டங்களைக் கூட்டுதலும், நடாத்துதலும் அவற்றில் அவதானிக்கப்படவேண்டிய நடவடிக்கைமுறைகள், அத்தகைய கூட்டங்களுக்கான கூட்ட நடப்பெண் மற்றும் அவர்களது தத்துவங்களையும், கடமைகளையும் பிரயோகித்தலும், புரிதலும் ;

(இ) கூட்டுத்தாபனத்தின் பல்வேறு அலுவலர்கள், முகவர்கள், சேவையாளர்கள் என்பவர்களின் நியமனங்களும், தத்துவங்களும், கடமைகளும் மற்றும் பணிகளும்;

(ஈ) நிறைவேற்றுக்குழுவினதும், கூட்டுத்தாபனத்தினதும் உறுப்பினராக வருவதற்கான தகைமைகள் ; அத்துடன்

(உ) கூட்டுத்தாபனத்தின் ஆதனத்தை நிருவகித்தலும் முகாமை செய்தலும்.

(2) கூட்டுத்தாபனத்தினால் ஆக்கப்பட்ட விதிகள் இப்பிரிவின் (1)ஆம் உட்பிரிவின்கீழ் விதி ஒன்று ஆக்கப்படுவதைப் போன்று அதே போன்ற கூட்டத்திலும் அதே முறையிலும் திருத்தப்படலாம், மாற்றப்படலாம், ஒழிக்கப்படலாம் அல்லது அதற்கு எதுவும் சேர்க்கப்படலாம்.

(3) கூட்டுத்தாபனத்தின் உறுப்பினர் ஒவ்வொருவரும் கூட்டுத் தாபனத்தின் விதிகளுக்கமைந்தோராதல் வேண்டும்.

கூட்டுத்தாபனத்தினால் செலுத்த வேண்டிய அதனால் அறவிடப்பட வேண்டிய நிதி.

**7**. இந்தச் சட்டம் அமுலுக்குவரும் ஆரம்ப தினத்திற்கு முந்திய நாட்களில் இருந்த மன்றத்தின் சகல கடன்கள் மற்றும் பொறுப்புகள் கூட்டுத்தாபனத்தினால் செலுத்தி விடுவிக்கப்படல் வேண்டும் என்பதுடன், அன்றைய தினமே மன்றத்தின் அறவிடப் படவேண்டிய அல்லது செலுத்த வேண்டிய சகல கடன்கள், பங்குதாரர் நிதி மற்றும் அங்கத்துவ நிதி இச்சட்டத்தின் பணிகளுக்காக கூட்டுத்தாபனத்திற்குச் செலுத்தப்பட வேண்டும்.

கூட்டுத்தாபனத்தின் அசையும் அசையா சொத்துக்கள்.

**8**. ஏதேனுமோர் கொள்வனவு, அன்பளிப்பு, நன்கொடை, எழுத்து மூலம் வழங்கப்படுகின்ற அல்லது வேறு ஏதாவது ஒரு முறையில் கூட்டுத்தாபனத்திற்குக் கிடைக்கும் அசையும் மற்றும் அசையா சொத்து ஒன்றைப் பெற்றுக் கொள்வதற்கும் மற்றும் கொடுப்பதற்கும் சட்டத்தினால் கூட்டுத்தாபனத்திற்கு இயலுமை மற்றும் அதிகாரம் கிடைத்துள்ளதுடன், அந்த சொத்துக்களை விற்பனை செய்தல், அடகு வைத்தல், குத்தகைக்கு அளித்தல், பரிமாற்றம் செய்தல் அல்லது வேறு ஏதாவது முறையில் வெளியேற்றுவதற்கான முழு அதிகாரத்துடன் இந்தச் சட்டத்தின் பணிகளுக்காக கூட்டுத்தாபனத்திற்கு அனைத்து உரிமைகளும் உண்டு.

கூட்டுத்தாபனத்தின் நிதியம்.

**9**. (1) கூட்டுத்தாபனத்திற்கு சொந்த நிதியம் இருத்தல் வேண்டும். பரிசுகள் அல்லது அன்பளிப்பு, ஒதுக்கீடுகள், சந்ததாரர் பணம், அங்கத்துவ நிதி அல்லது கட்டணமாக கூட்டுத் தாபனத்திற்கு அல்லது கூட்டுத்தாபனத்தால் கிடைக்கும் பணம், கூட்டுத்தாபனத்தினால் தீர்மானிக்கும் விதத்தில் ஒரு வங்கிக்கு அல்லது பல வங்கிகளுக்கு கூட்டுத்தாபனத்தின் கணக்கிற்கு வைப்பு செய்ய முடியும்.

(2) கூட்டுத்தாபனத்தின் குறிக்கோளை நடைமுறைப்படுத்தும் போது கூட்டுத்தாபனத்தால் செலவு செய்யப்படும் செலவினங்கள் சகலவற்றையும் கூட்டுத்தாபனத்தின் நிதியத்திலிருந்து செலுத்த முடியும்.

கூட்டுத்தாபனத்தின் இலச்சினை.

**10.** கூட்டுத்தாபனத்தின் தலைவர் மற்றும் செயலாளர் அல்லது பொருளாளரின் முன்னிலையில் அன்றி கூட்டுத்தாபனத்தின் முத்திரை எந்த பத்திரங்களிலும் இடக்கூடாது என்பதுடன் அவர்களினால் தாம் சமுகமளித்தமைக்கு அடையாளமாக அச்சாசனத்தில் தமது பெயர்களை எழுதிக் கையொப்பமிடுதல் வேண்டும் என்பதுடன், அத்தகைய கையொப்பமிடுதலானது எவரேனும் ஆள் சாட்சியொருவராகக் கையொப்பமிடுவதினின்றும் தனிவேறானதாதலும் வேண்டும்.

உறுப்பினர்களின் பொறுப்பை வரையறுத்தல்.

**11.** கூட்டுத்தாபனத்தின் உறுப்பினரெவரும் கூட்டுத்தாபனத்தின் கடன்களையும், பொறுப்புக்களையும் கொடுத்துத் தீர்க்கும் நோக்கத்துக்காக அவரிடமிருந்து கூட்டுத்தாபனத்திற்கு வருமதியாகவிருக்கக்கூடியவாறான அத்தகைய உறுப்பினரிடமிருந்து செலுத்தப்பட வேண்டிய தொகையை விஞ்சுகின்றதான ஏதேனும் உதவுதொகையைச் செலுத்துவதற்கு ஆளாதலாகாது.

கலைப்பின் போது எஞ்சியுள்ள ஆதனம்.

**12.** கூட்டுத்தாபனம் கலைக்கப்படுவதன்மீது அதன் எல்லாக் கடன்களும் மற்றும் பொறுப்புக்களும் தீர்க்கப்பட்டதன் பின்னர் எத்தகையதுமான ஏதேனும் ஆதனம் எஞ்சியிருப்பின், அத்தகைய ஆதனம் கூட்டுத்தாபன உறுப்பினர்களிடையே பகிர்ந்தளிக்கப்படுதல் ஆகாது. கூட்டுத்தாபனத்தின் குறிக்கோள்களை ஒத்த குறிக்கோள்களைக் கொண்டதும் அல்லது கொண்டனவும், ஏதேனும் வருமானத்தை அல்லது இலாபத்தை அதன் அல்லது அவற்றின் உறுப்பினர்களிடையே பகிர்ந்தளிப்பதிலிருந்து விதிகளினால் தடைசெய்யப்பட்டதும் அல்லது தடைசெய்யப்பட்டனவுமான வேறு ஏதேனும் நிறுவனத்திற்கு அல்லது வேறு எவையேனும் நிறுவனங்களுக்குக் கொடுக்கப்படுதல் அல்லது கைமாற்றப்படுதல் வேண்டும். அத்தகைய நிறுவகம் அல்லது நிறுவனங்கள் கூட்டுத்தாபனம் கலைக்கப்படுகையில் அல்லது அதற்கு நேர்முந்திய நிலையில் கூட்டுத்தாபனத்தின் உறுப்பினர்களினால் தீர்மானிக்கப்படுதல் வேண்டும்.

**13.** (1) கூட்டுத்தாபனத்தின் நிதியாண்டு பஞ்சாங்க ஆண்டாதல் வேண்டும். கணக்குகளும் கணக்காய்வும்.

(2) கூட்டுத்தாபனமானது, அதன் வருமானம் மற்றும் செலவினம், சொத்துக்களும், பொறுப்புக்களும் அத்துடன் கூட்டுத்தாபனத்தின் மற்றெல்லாக் கொடுக்கல் வாங்கல்கள் என்பன பற்றிய முறையான கணக்குகளை வைத்திருக்கச் செய்தல் வேண்டும்.

(3) கூட்டுத்தாபனத்தின் கணக்குகள் பேரவையினால் நியமிக்கப்பட்ட ஒரு தகைமைபெற்ற கணக்காய்வாளர் ஒருவரினால் கணக்காய்வு செய்யப்படல் வேண்டும்.

இப்பிரிவில், "தகைமைபெற்ற கணக்காய்வாளர்" என்பது–

(அ) இலங்கைப் பட்டயக் கணக்காளர் நிறுவனத்தின் உறுப்பினராக அல்லது சட்டத்தினால் தாபிக்கப்பட்ட வேறேதேனும் நிறுவகத்தின் உறுப்பினராக இருந்து, அத்தகைய நிறுவகத்தின் பேரவையினால் கணக்காளரொருவராகத் தொழில் புரிவதற்காக வழங்கப்பட்ட சான்றிதழொன்றைக் கொண்டவராகவுமுள்ள தனியாள் ஒருவர்; அல்லது

(ஆ) கணக்காளர் குழுமமொன்றின் வதிவுள்ள பங்காளர்களுள் ஒவ்வொருவரும் இலங்கை பட்டயக் கணக்காளர் நிறுவகத்தின் உறுப்பினரொருவராக அல்லது சட்டத்தினால் தாபிக்கப்பட்ட வேறேதேனும் நிறுவனத்தின் உறுப்பினர் ஒருவராக இருந்து, அத்தகைய நிறுவனத்தினால் கணக்காளரொருவராகத் தொழில்புரிவதற்காக வழங்கப்பட்ட சான்றிதழொன்றைக் கொண்டவராகவுமுள்ள கணக்காளர் குழுமம் ஒன்று,

என்று பொருள்படும்.

*குடியரசினதும் ஏனையோரினதும் உரிமைகளைப் பேணுதல்.*

**14.** இந்தச் சட்டத்தில் குறிப்பிடப்பட்டுள்ளவர்களின் மற்றும் அவர்களினால் அவர்களினது மற்றும் அவர்களின்கீழ் உரிமை பெறுகின்றவர்களின் உரிமைகள் தவிர்ந்த குடியரசின் அல்லது ஒரு பொது அமைப்பு அல்லது கூட்டுத்தாபனம் அல்லது வேறு எந்த நபர்களினதும் உரிமைகளுக்கும் இந்தச் சட்டத்தில் உள்ள எவற்றினாலும் பாதிப்புக்கள் அல்லது தாக்கம் ஏற்படுத்தக்கூடாது.

*ஒவ்வாமை ஏற்படும் பட்சத்தில் சிங்கள உரை மேலோங்கி நிற்றல்.*

**15.** இச்சட்டத்தின் சிங்கள, தமிழ் உரைகளுக்கிடையே ஏதேனும் ஒவ்வாமை ஏற்படும் பட்சத்தில், சிங்கள உரையே மேலோங்கி நிற்றல் வேண்டும்.